சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

பு.த.சா.1 ஜீவனாந்தம் த/பெ. கந்தசாமி வயது.49

**சாட்சி ஆஜராகி குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியை 4, 5 ஆண்டுகளாக எனக்கு தெரியும். நான் பேருந்து நிலையத்தில் டீ கடை வைத்துள்ளேன் அந்த வகையில் எதிரியை எனக்கு தெரியும். நான் ரியல்எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறனே். STC 366/2022 வழக்கின் புகார்தாரான வாசு என் டீ கடைக்கு வருவார், அந்த வகையில் அவரை தெரியும். STC 364/2022 வழக்கின் புகார்தாரான சன்முகம் என் வீட்டில் இருந்து 10 வீடுகள் தள்ளி உள்ளார் அதன் அடிப்படையிலும் தெரியும். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. நான் வருமானவரி கணக்கு வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் வேறு யாருக்கேனும் கடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ரூ.20,000/–திற்கு அதிகமாக கடன் கொடுத்தால் ஆவணங்கள் எழுதி பெற வேண்டும், வங்கி கணக்கின் மூலம் தர வேண்டும் என்ற விதி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வேறு எந்த வழக்கிலும் சம்மந்தப்படவில்லை. நான் எச்.டி.எப்.சி வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். எனது வங்கி கணக்கின் பணபரிவர்தனை விவரங்கள் சமர்பிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எதிரி என்னிடம் கேட்டபோது சுமார் 6,7 லட்சம் என்னிடம் இருந்தது, மீதி பணத்தை நான் நகையை விற்று கொடுத்தேன். நான் சுமங்கலி ஜீல்லர்சில் விற்றேன். எனக்கு ஒரு சொந்த வீடு உள்ளது வேறு சொத்தும் இல்லை. அந்த வீட்டில்நான் குடியுள்ளேன், மேல் மாடியை வாடகைக்குவிட்டுள்ளேன். நான் 500 ரூபாய் தாள்காளக கொடுத்தேன், சாட்சி யோசித்து 18 கட்டுகள் என்று கூறினார். எதிரிக்கு நான் பணம் கொடுக்கும்போது எனது வீட்டில் நானும் எனது மனைவி ரேவதியும் இருந்தோம். இந்த வழக்கில் எனது மனைவியை சாட்சிக்க வேண்டுமா என்றால் தேவை என்றால் விசாரிக்கிறேன். நான் சீட்டு எதுவும் நடத்தவில்லை, நானும் யாரிடமும் தற்போது சீட்டிற்கு பணம் கட்டவில்லை. வட்டி தொழில் செய்வதற்கு மாவட்ட பதிவாளர் மற்றும் சீட்டு பதிவாளர் இடம் பதிவு செய்வார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். நானும், எதிரியும் மேற்படி வாசு மற்றும் சன்முகம், 2 நபர்கள் உடன் சேர்ந்து மாவட்ட பதிவாளரிடம் சீட்டு நடத்துவதற்காவும், வட்டி தொழில் செய்வதற்கும் ஆவணம் பதிவு

செய்துள்ளோம் என்றால் இல்லை. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், எதிரியும் அதில் ஒரு பங்குதாரர் என்றால் இல்லை. மேற்படி 9 லட்சம் கொடுததாக கூறுவதை தவிர வேறு ஏதேனும் எதிரிக்கு பணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. காசோலையில் முன் தேதியிட்டு வழங்குவதும், பின் தேதியிட்டு வழங்குவதும் குறித்த வித்தியாசம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் எதிரிக்கு 18.02.2022 ம் தேதி பணம் கொடுத்தபோது எதிரி என்னிடம் காசோலை கொடுத்தார். நான் காசோலையை வங்கியில் செலுத்துவதற்கு முன்பு எதிரியிடம் கேட்டேன். அப்பொழுது எதிரி நீ எங்கு வேண்டுமானலும் போ நான் பணம் கொடுக்கமாட்டேன் என்று கூறினார். நான் இந்த விவரத்தை அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். காசோலையை யார் பூர்த்திசெய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரி கொடுத்ததாக சொல்லும் காசோலை ஒரு நிறுவனத்தின் பெயரில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காசோலையில் குறிப்பிடடுள்ள நிறுவனத்திற்கும், எதிரிக்கும் என்ன உறவு என்று தெரியமா என்றால் தெரியாது. நிறுவனத்தின் பெயரில் அறிவிப்பு ஏதேனும் அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. நிறுவனத்தை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு புகாரில் சொல்லியுள்ள வாறு பணம் தருவதற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் சொல்லியுள்ளாவாறு எனக்கும் எதிரிக்கும் இடையே எந்த பணம் பரிவர்த்தனையும் இல்லை என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடைது இல்லை என்றால் சரியல்ல. காசோலையை வங்கியில் செலுத்தினால் முதலில் தேதி, பெயர், கணக்கில் தொகை உள்ளதா என்று பார்த்தபிறகு தான் கையெழுத்தை சரிபார்ப்பார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் மாதிரி கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. அறிவிப்பிற்க்கு பின், வழக்கிற்கு முன் நான் எதிரியிடம் எந்த வித பேச்சு வார்தையும் வைத்துக்கொள்ளவில்லை. அறிவிப்பு கொடுத்த பிறகு எனக்கும் எதிரிக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தை குறித்து இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால், எந்த பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை. சன்முகம், நெடுமாறன், வாசு, எம்.ஆர்.ராஜா, விச்சு, நடராஜ், ரவி, சரவணன் மற்றும் வாசு, எதிரி ஆகிய 9 பெயர்களில் நிதி நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி நிறுவனத்தை 2020ல் பதிவு செய்து, கொரோனா காலம் வந்ததால் நிறுவனத்தில் வைத்திருந்த எதிரியின் காசோலைகளை பயன்படுத்தி தவறாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், மற்ற பங்குதாரர்களும் எதிரியை

மிரட்டி எங்கள் விருப்பத்திற்கு பணியவைக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அவருடைய காசோலைகளை தவறாக கையாண்டு உள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பட்ட பிறகு நேரில் சந்தித்து பினான்ஸ் பிரச்சனையை சூமுகமாக பேசி முடித்துக்கொள்ளாலம் என்று முடிவு எடுத்த நிலையில் எதிரி பதிலறிவிப்பு எதுவும் தரவில்லை என்றால் சரியல்ல. 2014 ம் ஆண்டு மாடல் TN83 X 2490 பதிவெண் சிப்ட் காரை நான் பெற்றுக்கொண்டு அதில் பெயர் மாற்றுதல் காரணமாக எனக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட பிரச்சணை தொடர்பாக நிறுவனத்தில் இருந்த காசோலையை நாங்கள் தவறாக பயன்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுக்குள் பணபரிவர்தனை நடக்காததாலும், காசோலையை எதிரி தராததாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் தான் காசோலை யார் பெயரில் உள்ளது என்ற விவரம் கூட தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Signature of witness.